★ சுங்கப் பகுதியினரின் பரிசீலனையின் பின்பே

# வடபகுதி உணவுப்பொருள் கப்பலில் ஏற்றப்படும்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

(கொழும்பு)
கொழும்பிலிருந்து வட பகுதிக்கு அனுப்பப்படும் உண வுப் பொருட்களை பரிசீலனை செய்யும்படி சுங்கப்பகுதி னரை அரசு பணித்துள்ளது. கொழும்பிலிருந்து வட பகுதிக்கு அனுப்பப்படும் உண வுப் பொருள்கள் அண்மை (4-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 22 இதழ் 23
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 05 — 03 — 1993

## இளாலி தடையே உணவு பற்றாக்குறைக்கு காரணம்

(கொழும்பு)
இளாலி கடல் பிரதேசம் மீது அரசு விதித்திருக்கும் தடை நீக்கப்படும்வரையில் வடபகுதிக்கான உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாது. இவ்வாறு கொழும்பில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)

## தடையை உடன் நீக்க கோரிக்கை

(கொழும்பு)
இளாலிக் கடல் பகுதியில் அரசு விதித்திருக்கும் தடையை உடனடியாக நீக்கு மாறு நவசமசமாஜக் கட்சி அரசைக் கோரியுள்ளது. சம்பந்தப்பட்ட கடல் நீர் 4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை தீர்வு —

# பிரபாகரன் தெரிவித்த கருத்து அரசு தரப்பில் ஆராயப்படுகிறது

(கொழும்பு)
இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்ட கருத்து தற்போது அரசு தரப்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகிறது. அரசு தரப்பு செய்தித்தாளான 'டெய்லி நியூஸ்' பத்திரிகை இந்தக் கருத்துக்கு முக்கியத் துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

பி.பி. ஸிக்கு திரு. பிரபாகரன் பேட்டி வழங்கி மூன்று நாட்களின் பின்னர் அவரது கருத்துக்கள் அரசின் உயர் மட்டத்தைக் கவர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சமஷ்டி முறையிலான தீர்வை பரிசீலிக்க தயாரென திரு. பிரபாகரன் கூறியுள்ளது வரவேற்கத்தக்கதென கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் குழுக் களும் வெளியிட்ட கருத்துக்களை அரசு திரு. பிரபாகர னின் கருத்துக்கு முக்கியத்து வம் கொடுக்கும் நிலைக்கு உள் ளாகியிருப்பதற்கு காரணம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## 'பிரபா'விடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)
இனப்பிரச்னையைத் தீர்ப்ப தற்கு விடுதலைப்புலிகள் தலை வர் வே. பிரபாகரன் அண் மையில் பி. பி. ஸிக்கு தெரி வித்த கருத்தை நாடாளு மன்றத் தெரிவுக் குழுவுக்கு தெரிவிக்கவேண்டும் என்று அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கா நேற்று பத்திரிகையா ளர் மகாநாட்டில் தெரிவித் துள்ளார்.

விடுதலைப்புலிகள் நாட்டின் அமைதித் திட்டத்துக்கென இனப்பிரச்னையைத் தீர்ப்ப தற்காக அரசினால் நியமிக்கப் பட்ட சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் தமது திட்டத்தை முறைப்படி சமர்ப்பித்தல் வேண்டும் என்று அமைச்சர் செய்தியாளர்களி டம் மேலும் தெரிவித்தார்.
(வி-இ)

## தமிழ்நாடு அரசிடம் இலங். அரசு வேண்டுகோள்

(சென்னை)
இலங்கையில் நிலவும் இனப் பிரச்னைக்கான தனது தீர்வு யோசனைகளை இலங்கை நாடாளுமன்ற தெரிவுக் குழு விடம் சமர்ப்பிக்குமாறு தமிழ் நாடு அரசை இலங்கை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் பி.பி.ஸி நிரு பருக்கு அண்மையில் வழங் கிய பேட்டிக்கு பதிலளிக்கும் போதே சிரேஷ்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மேற்கண்டவாறு தெரிவித் தார்.
(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழு மீண்டும் 11ம் திகதி கூடுகிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு இணைப்பை தவிர்த்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இம்மாதம் 11-ம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூடி ஆராயவுள்ளது. இக்கூட்டத்தின் பின்னர் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட லாம் என்று எதிர்பார்க்கப் (4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உ/த) பரீட்சை புள்ளிகள் வந்து சேர்ந்தன

(திருநெல்வேலி)
க. பொ த உயர்தரப் பரீ ட்சை (டிசேடம்) 1991 பரீட் சைக்குத் தோற்றிய மாண வர்களின் மொத்தப் புள்ளி கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேர்ந் (4-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியப் பரீட்சை: வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)
மாவட்ட அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களை நியம னம் செய்வதற்கான போட் டிப் பரீட்சைக்கான வினாத் தாள்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டது.

நாளை சனிக்கிழமை இப் பரீட்சை யாழ். மாவட்டத் தில் பத்து பரீட்சை நிலையங் களில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு 1500 பேர் யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றுகின்றனர். 150 பரீட் சார்த்திகளுக்கு ஒரு பரீட்சை நிலையம் என்ற அடிப்படை யில் பரீட்சை நடாத்த ஒழுங் குகள் செய்யப்பட்டுள்ளது.
(159-இ)

### யாழ். மாவட்டத்துக்கு

## அதிகளவு உணவு அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)
யாழ். மாவட்டத்தில் ஏற் பட்டுள்ள உணவுத்தேவையை பூர்த்திசெய்ய அரசாங்கம் தன்னால் இயன்ற நடவடிக்கை எடுத்துள்ளது. இப்போது அங்கு அதிகளவு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுகின் றன. மேலதிக அத்தியாவசிய (4-ம் பக்கம் பார்க்க)

**உளவாளிகள் !!!**
அவதானமாக இருக்கவும் - - - !
பகல் இரவாய் எம்மோடு
பலம்போன்று நிற்கும் சிலரால்,
ஒரு நொடியில் இடிவிழலாம்?

### மட்டு விமான நிலைய விஸ்தரிப்பு

## 356 தமிழ் குடும்பங்கள் இருப்பிடம் இழந்தன

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு காரண மாக 356 தமிழ்க் குடும்பங் கள் இருக்க இடமின்றி அகதி களாக இடம்பெயர்ந்துள்ள னர்.

இவ்வாறு இடம்பெயர்ந் துள்ள அகதிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாக அரசு தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டும் கூட இதுவரை யில் உருப்படியான நடவ டிக்கை எதுவும் எடுக்கப்பட்ட (4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி தாக்குதல்பற்றி அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)
இளாலி கடற்பகுதியில் ரோந்து புரிந்த கடற்படை படகு ஒன்று கடற்கண்ணியில் சிக்கியதில் இரு கடற்படை (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### போத்தல்கள் தேவை

ஜாம், பியர், சோடியக் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது Taste Line Industries (PVT) Ltd No-14, Seenier Lane, Jaffna.

(ஏ-2918)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும் தொடர்பு:- சனி, ஞாயிறு காலை 8 00—10-00 மணி. 204, மானிப்பாய் ரோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(இ-7287)


## மலர்

## விண்ணப்பம்

(கொழும்பு)

அடுத்துவரும் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதற்கு ஏராளமானவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

-ர-சி

## இராசி பலன்

05-03-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மாசி 22)

அவாதசி மு. இ. 10-51 வரை, பூசம் ந. இ. 12-55 வரை, மரணயோகம் இராகு காலம் காலை 10-56 முதல் 12-26 வரை, சுபநேரம் காலை 6-26 முதல் 7-56 வரை.

மேடம்- பணத் தட்டுப்பாடு. சிந்தனைக் குழப்பம், யோசனை.

இடபம்- தொழில் வெற்றி, புண்ணிய காரியம், காரிய சித்தி.

மிதுனம்- தீராத வம்பு, இல்லற துயரம், அலைச்சல்.

கடகம்- தனலாபம், பொதுஜன பாராட்டு, நல்லசெய்தி.

சிங்கம்- நிதானக் குறைவு, அதிக செலவு, வாக்குவாதம்.

கன்னி- ஆடம்பரம், பேச்சில் திறமை, அதிகாரம்.

துலாம்- சுயநலம், பிறரை வசியப்படுத்தல், குடும்பசுகம்

விருச்சிகம்- பொறுமை இழத்தல், தொழில் குறைவு, மனச்சுமை.

தனுசு- பிறர் தொல்லை, கடினவாக்கு, அடிமைநிலை.

மகரம்- பிறர் ஆதரவு, தொழில் லாபம், அன்பளிப்பு.

கும்பம்- கருத்து மோதல், புத்திரர் சந்தோசம், சாமர்த்தியம்.

மீனம்- தனிமைப்படல், கடன் தொல்லை, ஏமாற்றம்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயப் பவள விழாவையொட்டி இன்று 05-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை பொருட்காட்சி விழா நடைபெறும். நாளை 6ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு பவள விழா மலர் வெளியீடு இடம்பெறும். 07-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு சான்றோர்களை கௌரவித்தல் இடம்பெறும்.

பேச்சு, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, தாளக்காவடி முதலான கலை நிகழ்ச்சிகள் சனி, ஞாயிறு மாலை வேளைகளில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

சாரம் வெளியீட்டாளர்களின் ஏற்பாட்டுடன் இன்று 5ம் திகதி மகிலாகம் மகா வித்தியாலயத்தில் பகல் 11 மணியளவில் "பிஞ்சு உள்ளங்களில் மிஞ்சும் உணர்வுகள் கொஞ்சும் பாடல்களே" என்ற பொருளில் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் உரையாற்றுவார்.

0 0

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீசிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று 5ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்தவேல் சுவாமிகளின் தலைமையில் திருமந்திர முற்றோதல் பூர்த்தி விழா நடைபெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் கழகத்தின் ஆதரவில் "இளைஞர்களின் ஆளுமை வளர்ச்சி" என்னும் தலைப்பில் வண. பிதா எஸ். டேமியன் உரையாற்றும் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை கிரிவுரை மண்டபத்தில் இன்று 5-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று 5ம் திகதி வெள்ளி மாலை 2-30 மணியளவில் திரு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் சமய சொற்பொழிவுகளும், நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம்பெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கமலாசனி வித்தியாலய நிறுவுனர் தினமும், பவள விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று 5ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும். முதன்மை விருந்தினராக திரு. இரா. சுந்தரலிங்கமும் வடபிரதேச கல்விப் பணிப்பாளர்), திரு. பொ. வீரபத்திரனும் (தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர், விசேட விருந்தினராக திரு. வெ. இளங்குமரனும் (தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர்) திரு. அ. பொ. செல்லையா (பொருதணி அதிபர்) கலந்து கொள்வார்கள்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தில் நடந்த கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. சி. சோதிலிங்கம் உப தலைவர் திரு. ஆ. சிறிதரன், செயலாளர் திரு. க. சிவரூபன், உபசெயலாளர் திரு. கா. ஜீவஸ்யாந்தன், பொருளாளர் திரு. இ. செல்வரட்ணம் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

(நெல்லியடி)

மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக திரு க. செல்வத்துரையும் உபதலைவராக செ. முத்துராசாவும் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசுவும் உப செயலாளர் திரு. கே. ஆனந்தன், பொருளாளர் திரு. கே. கந்தசாமியும் 10 பேர்களையுடைய நிர்வாகசபையும் தெரிவாகியது -160

0 0

(அச்சுவேலி)

புத்தூர் விக்னன் சனசமூக நிலையத்தின் புதுவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. நா. சிவஞானமும், உப தலைவராக திரு. எஸ். தர்மராசாவும், செயலாளராக திரு. சி. சுந்தரலிங்கமும், உப செயலாளராக திரு சி. தவராசாவும், 6 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.(74)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழக புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் க. ஸ்ரீகாந்தன், உபதலைவர் செல்வி க. அருணா, செயலாளர் செல்வி பொ. பவானி, உபசெயலாளர் மா. ஜெயக்குமார், பொருளாளர் செல்வி ஸ்ரீ கௌரி, இணைப் பதிப்பாசிரியர் செல்வி இ. ஜெயலக்சுமி, செல்வி க. சிவநாயகி, ம. உதயகுமார் மேலும் ஆறு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

(உடுவில்)

கல்லூரி வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. ஜெகநாதன், செயலாளர் திரு. சோ. அருணகிரிநாதன், பொருளாளர் திரு கா. செ. கி. முத்துக்குமார் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(109)

0 0 0

(நெல்லியடி)

கோப்பாய் குமரேசா சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகள் தெரிவு திரு. இ. அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. இ. அன்னலிங்கம், உப தலைவராக திரு பூ. நாகராசாவும், செயலாளராக திரு வே. தம்பிப்பாவும், பொருளாளராக திரு க. சிவகுமாரும் தெரிவாகியதுடன் ஆறுபேர்கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. (160)

மீளாய்வு

(தாவளையடி)

வடமராட்சி கிழக்குபிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள குடும்பங்களின் உலர் உணவுப் பொருட்கள் பெறும் 'இ' அட்டைகள் கிராமசேவை அலுவலர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டுவருகின்றன. 163


Follow me ரெலிவிசன், வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கில பாட நிகழ்ச்சி தொடர் புத்தகம் வெளிவந்துள்ளது.

விலை: 40/- ரூபா மட்டுமே.

விற்பனையாளரும், பிரதான ஏஜன்ட்டும்

**பாலாஜி புத்தகசாலை**

**16, பஸ் நிலையம்,**

**யாழ்ப்பாணம்.**

மற்றும் பிறந்தநாள் மடல்களும், 5ம் ஆண்டு புலமைப் பரிசுக்கான புத்தகங்கள், O/L, A/L வினாவிடைகள், கமலா தம்பிராசா, பிறைட் உயர் கல்வி வெளியீடுகள் பெற்றுக் கொள்ளலாம்.

**BALAJI BOOK CENTRE**

**16, BUS STAND,**

**JAFFNA.**

(எ 2932)


# கற்பூரம் கடத்த முயன்ற சாரதி, நடத்துனர் கைது

## லொறி தடுத்து வைப்பு

(வவுனியா)

25 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்பூரத்தை சவர்க்காரப் பெட்டிகளுக்குள் மறைத்து வைத்து வடபகுதிக்கு கடத்த முயன்றவர்கள் வவுனியாவில் கைதாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா சோதனை முகாமிலுள்ள படையினர், சவர்க்கார பெட்டிகளில் கற்பூர வாசனை வந்ததில் சந்தேகம் கொண்டு, லொறியிலிருந்த சவர்க்காரங்களைப் பிரித்துப் பார்த்த போது குட்டு வெளிப்பட்டது.

லொறி தடுத்துவைக்கப்பட்டதோடு லொறிச்சாரதியும், நடத்துனரும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(கே-ரி)

## விநியோகம்

(தாவளையடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பதினைந்து பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பிரிவுக்கும் இரண்டு தையல் இயந்திரங்கள் வீதம் முப்பது தையல் இயந்திரங்களை வழங்குகின்றது. (163)


யா/சன்மார்க்க மகாவித்தியாலயத்தின்

வருடாந்த

**இல்ல விளையாட்டுப் போட்டி**

(மெய்வல்லுநர்)

இன்று(05-03-93) ல் பிற்பகல் 2.00 மணியளவில்

யா/சன்மார்க்க மகாவித்தியாலய

மைதானத்தில் நடைபெறுகிறது

பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும்

அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அன்பளிப்பு:

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளை அதிநவீன மிக்ஸிங் (Mixing) கமரா மூலம் வீடியோ படம் பிடித்திடவும்

★ புதிய பழைய சினிமா பாடல்களை பதிவுசெய்து கொள்ளவும் —

★ வீடியோ படக்காட்சிகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்

**சுப்பஸோ.**

**வீடியோ ஓடியோ சென்ரர்**

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(திறமான முறையில் மிக்ஸிங் செய்து கொடுக்கப்படும்)

(இ 7290)


## 27-ம் நாள் நினைவஞ்சலி



சோமசுந்தரம்

(பாலசுப்பிரமணியம்)

("கணபதி ஸ்ரோர்ஸ்" முன்னாள் உரிமையாளர்)

தோற்றம்: 22-04-1939 மறைவு: 07-02-1993

அருந்தவப் பிறவியாய்
அகிலத்தில் மலர்ந்து
"கிளி" என்ற செல்ல நாமமேற்று
பல நற்பணிகள் புரிந்திட்டு
கடமையே கருத்தனமாய்
தொழிலகம் போற்றுபவராய்
இல்லத்தின் குல விளக்காய்
பாசத்தில் சிறப்பிடமாய்
பக்தியிலே ஆத்திகனாய் திகழ்ந்து
எம்மைப் பிரிந்து பரமனடி சென்றீரோ?

நித்தம் நின் நினைவுகளால்
நீராகிப் போகும்

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு, இணுவில்.

(சி-7289)

தென்னாபிரிக்காவில்

# பாடசாலை பஸ் மீது சூடு ஆறு சிறுவர்கள் உயிரிழப்பு

(பிறிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் கடந்த செவ்வாயன்று பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய சரமாரியான துப்பாக்கிச்சூட்டில் ஆறு சிறுவர்கள் அவ்விடத்திலேயே பலியாகினர்.

பஸ் சாரதி, மற்றும் 6 சிறுவர்களும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

இப்படுகொலையைச் செய்தவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்முயற்சியில் தென்னாபிரிக்க பொலிஸார் இறங்கியுள்ளனர்.

இப்படுகொலையைச் செய்தவர்களை தேடிக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு 25 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என தென்னாபிரிக்க பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட சிறுவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் எதிர்க்குழுவான 'இன்காட்டா' கட்சி உறுப்பினர்களின் பிள்ளைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படுகொலைக்கும் தமக்கும் எந்தவித தொடர்புமில்லை என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அறிவித்துள்ளதோடு, இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள பல கட்சி பேச்சுவார்த்தையைக் குலைப்பதற்கான முயற்சியே இது எனஇப்படுகொலையை கண்டனம் செய்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் ஏனைய எதிர்க்குழுக்களுக்குமிடையேநடைபெற்றுவரும் மோதல்களில் ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கே-சி)

கவிதைப் போட்டி

## அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் "கொழும்பு தமிழ்ச் சங்கம்" நடாத்திய கவிதைப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் ச. மணிமாறன் முதலிடம் பெற்றுள்ளார்.

செல்வன் மணிமாறன் அகில இலங்கை கம்பன் கழக பட்டிமன்ற பேச்சாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருக்கான பரிசளிப்பு கொழும்பில் விரைவில் நடைபெறவுள்ளது. (இ)

## மலேரியா மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ்.சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும், அரச மத்திய மருந்தகங்களிலும் மலேரியா நோய்க்கான 'குளோரோகுவின்', 'பிறிமாகுவின்' குளிகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இரத்தபரிசோதனை மூலம் மலேரியா நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர்களுக்கு இந்த மருந்துத் தட்டுப்பாட்டினால் உரிய சிகிச்சை வழங்கமுடியாது டாக்டர்கள் சிரமப்படுகின்றனர். இதேவேளை தனியார் பார்மஸிகளிலும் இந்தமருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் தகுந்த சிகிச்சை பெறமுடியாது திண்டாடுகின்றனர்.

மேற்படி மலேரியா நோய்க்கான குளிகைகளை விரைவில் அனுப்பிவைக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள தலைமைப் பீடத்திற்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (72-இ)

# செய்திச்சிதறல்

ஒய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)

மார்ச் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் நேற்று முன்தினம் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இதில் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட 300 ரூபா இலவன்ஸ்சும் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (159-71)

வயோதிபர் தற்கொலை

(நெல்லியடி)

நோயின் கொடுமையினால் பாதிக்கப்பட்டவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் புலோலி தெற்கு புற்றளை என்னும் இடத்தில் நடைபெற்றது.

5 பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி சிதம்பரப்பிள்ளை (வயது 76) என்பவரே இவ்விதம் தற்கொலை செய்து கொண்டவராவார். (160)

குழாய்க்கிணறுகள் அமைத்தல்

(யாழ்ப்பாணம்)

தற்போது பொது மக்கள் எதிர்நோக்கும் குடி நீர்ப் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளும் முகமாக யாழ். மாநகர சபை பிரதேசத்தில் 'யுனிசெவ்' உதவியுடன் 20 குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றை அமைப்பதற்குரிய நன்னீருள்ள பொது இடங்களை இனங்காண்பதற்கு பொது ஸ்தாபனங்களின் நலன் விரும்பிகள் மேற்படி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உதவலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கடையில் திருட்டு

(நெல்லியடி)

புலோலி கிழக்கு மாதனையில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் சுமார் 3000/- ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளது. இது பற்றி கடை உரிமையாளர் பருத்தித்துறை காவல்துறையில் புகாரிட்டுள்ளார். (160)

கைத்தொழில் கடன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப.நோ.கூ. சங்கம் சங்கஎல்லைப்பரப்பிலுள்ள அங்கத்தவர்களுக்கு இயந்திரம் மூலம் நீர் இறைக்கும் இயந்திரம் தெருவேலி மண்வெட்டி, சிறுகைத்தொழில் கடன் ரூபா 10 000 வழங்கப்படவுள்ளன.

நாய்கடிக்கு சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை ஆரம்ப வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரி மாதத்தில் 76 பேர் நாய்கடித்ததற்காக சிகிச்சை பெற்றுள்ளனர். (72)

இடைக்கால நிர்வாகசபை

(உடுவில்)

தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் சங்கம் புனரமைப்பது சம்பந்தமாக இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

திரு.சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் திரு. திருநாவுக்கரசுவை தலைவராக கொண்ட ஏழு பேர்கொண்ட இடைக்கால நிர்வாகசபை இதற்கென தெரிவுசெய்யப்பட்டது. (109)

மெய்வல்லுனர் போட்டி

(பளை)

வரணி செல்வா விளையாட்டுக் கழகத்தில் லெப்டினன் பாலனின் நினைவாக மெய்வல்லுனர் போட்டி அண்மையில நடைபெற்றது.

இதில் ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதில் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வரணி மத்திய விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தை பெற்றுள்ளது. [156]

நாய்களுக்கு தடுப்பூசி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாய்களுக்கு விசர் நோய் வராது தடுப்பூசி போடும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக இந்த தடுப்பு ஊசி மருந்து சகல கிராமங்களிலும் போடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (72-சி)

### தவக்கால நற்சிந்தனை

"முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள்" (மத். 5:24) உலகோர்க்கு கைலஞ்சம் கொடுப்பது போல நாம் இறைவனை ஒப்பிட முடியாது. நாம் அவருக்குக் காணிக்கை செலுத்துவதினால் இறைவனை எம்பால் திருப்பலாம் என்றால் அது தவறு. அவர் விரும்புவது தூயதோர் உள்ளம். அந்த உள்ளம் இறைவனை முழுமனதாய் ஏற்றுக் கொள்ளக்கூடிய இல்லமாக வேண்டின் சண்டை, சச்சரவு, கோபம், பகை முதலிய அனைத்தையும் நாம் விட்டொழிப்போம்.

ஜோ. தார்சிசியஸ்.

கடலில்

### சிக்கிய இந்திய மீனவர் மீட்பு

(மன்னார்)

பேசாலைகடலில் தத்தளித்த இந்தியமீனவர் ஒருவரை அங்கு மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் காப்பாற்றினர்.

இவரைக் கரைக்கு கொண்டு வந்த இவர்கள் இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (கே)

## பத்திரிகை செய்திகளை பரிசீலிக்க அரசு ஆணைக்குழு நியமிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் வெளிவரும் புதினப் பத்திரிகைகளில் வரும் செய்திகள், நடவடிக்கைகளை அவ்வப்போது கவனித்து பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே நடைபெற்ற இதுபற்றிய கலந்துரையாடலில் லேக்ஹவுஸ் ஆசிரியர்களும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளாரகள்.

இதற்கான சட்டம் இயற்றி ஆணைக்குழுவொன்று நியமிப்பதால் அரசாங்கத்துக்கு எதிராக செய்திகள் பிரசுரிக்கும் பத்திரிகைகளின்சுதந்திரமான செயலை, தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்ற அரசாங்கம் இந்த யோசனையில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (சு-சி)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நுண்கலைமன்றத்தின் மாதாந்த கருத்தரங்கு தொடர் - 3, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு கலைப்பேரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

'எகிப்திய மொசப்பத்தேமியக் கலை', 'சீன-யப்பானிய அழகியற் கொள்கை', 'கலையும் கைவினையும்' எனும் தலைப்புகளில் சிறப்புரைகள் இடம்பெறும். -சி

குண்டுவீச்சு

### ஒன்பது பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட எம்.பி ஹுசைன் சமரசிங்காவின் இல்லத்திற்கு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம், குண்டுவீச்சு தொடர்பாக 9 பேர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் இம்மாதம் 12ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். -கே

### நினைவஞ்சலி கூட்டம்

(எழுதுமட்டுவாள்)

மாணவர் இயக்கத்தின் உறுப்பினர் ச. சதீஸ்வரனின் நினைவஞ்சலிக் கூட்டம் கைதடி குமாரசாமி மகா வித்தியாலயத்தில் அதிபர் திருமதிவேலுப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இம்மாவீரருடைய உருவப்படத்திற்கு அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார்.

ஈகைச் சுடரை தந்தையார் ஏற்றிவைத்தார். 170)

## விவேகானந்தர் வாழ்வு பெரிய படிப்பினை தரும்

சுவாமி விவேகானந்தரை ஒரு நவீன சந்நியாசி என்று சொன்னால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. வைகாசி மாதம் முதலாம் திகதி 1897ம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் முதலாவது கூட்டம் பேலூர் மடத்தில் சுவாமி விவேகானந்தரின் தலைமையில் ஆரம்பமானது. சுவாமி விவேகானந்தர் தாம் மேலைநாடுகளில் சேர்த்த நன்கொடைப் பணம் யாவற்றையும் தமது சகோதர சீடரான பிரம்மானந்தரிடம் கொடுத்தார். "நகைச்சுவையாக

சுவாமி சித்ரூபானந்தா

தாய் ஆலயத்தை பத்திரமாகப் பார்க்கவும். ஆனால் தேவை ஏற்படின் குட்டிகளை கொல்லலாம்- அதாவது முதலாகவுள்ள பணத்தை செலவழியாது அதனால் வரும் வட்டியை செலவழிக்கவும் என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார்". இப்படி எல்லாப் பணத்தையும் கொடுத்த சிறிது நேரத்தில் சுவாமி விவேகானந்தர் தான் கங்கையில் ஓடக்காரனுக்கு கொடுக்க சில நாணயங்களை தருமாறு சுவாமி பிரம்மானந்தரிடம் கேட்டார். இதைக் கேட்ட பிரம்மானந்தசுவாமிகள் மனம் நெகிழ்ந்தார். "இப்பணம் யாவும் தங்களுடையது தானே" என்றார். சுவாமி விவேகானந்தரோ "நானும் தங்கள் சீடர் குழாத்திடை ஒரு அங்கத்தவர் தானே எனக்கு ஒரு முக்கியத்துவமும் கிடையாது என்றார்.

இன்று உலகிடை நாம் பலர் ஒரு சிறு காரியம் சாதித்தாலும் நமக்கு ஏற்படும் இறுமாப்பு, பேர் கௌரவம் எம்மாத்திரம்! சுவாமி விவேகானந்தர் வாழ்வு நமக்கு ஒரு பெரிய படிப்பினை தரும்.

சுவாமி விவேகானந்தரைப் பார்த்து சிலசகோதரசீடர்கள் "ஸ்ரீராமகிருஷ்ணர் சாஸ்திர அறிவு, தியானம், இவற்றுக்கு முக்கிய இடம் கொடுக்கும்படி சொல்லவும் தாங்கள் ஜீவ சேவையே சிவபூஜை என்று அடிக்கடி குறிப்பிடுவது உகந்ததல்ல என்றும் நீவிர் அமெரிக்காவில் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி பிரசாரம் செய்யாது உம்மைப்பற்றியே பிரசாரம் செய்தீர்" என்று குறை சொன்னார்கள். சுவாமி விவேகானந்தர் சற்று காரசாரமாக "ஆம், முதலில் மக்கள் என்னை அறியட்டும், பின்புதான் ராமகிருஷ்ணரை அறிய அவர்களால் முடியும்" என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருபொழுதும் தன்னை எல்லோரும் வழிபடவேண்டுமென்று விரும்பியது கிடையாது. ஸ்ரீராமகிருஷ்ண தத்துவத்தை அவரவர் தம்தம் இயல்புக்கு ஏற்றவாறு கடைப்பிடித்தலே இவ்வுலக உயர்வுக்கு சிறப்பான அம்சமாகும். இப்படிப்பட்ட நவீனசந்நியாசி யாழ்ப்பாணத்தில் 1897ம் ஆண்டு தை மாதம் 24ந் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் தமது திருப்பாதங்களை நாட்டினார். இன்று இக்கல்லூரியில் சுவாமிஜியின் அபிலாஷைக்கு ஏற்ற வகையில் ராமகிருஷ்ண-விவேகானந்த புத்தகக் கண்காட்சி முதன்முதலாக நடைபெறுவது நாம் அனைவரும் செய்த பாக்கியமாகும்.

# கறுப்புநரி நடவடிக்கை: வவுனியாவில் 675 பேர் படையினரிடம் சிக்கினர்

(வவுனியா)

இவ்வருடம் ஜனவரி மாதம் வவுனியாப் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட கறுப்பு நரி-4'' இராணுவ நடவடிக்கையால் 675 தமிழர் இராணுவத்திடம் சிக்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்திலுள்ள செக்கடிப்புலவு, கற்பகபுரம், கணேசபுரம், சமயமரம், மூனுமடு, ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 675 பேர் இராணுவத்திடம் சிக்கியுள்ளதாக அதிகாரபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மாணவி கத்தியால் குத்தப்பட்டு கொலை

(யாழ்ப்பாணம்)

புளியங்குளம் வவுனியாவை சேர்ந்த தனஞ்செயன் திருச்செல்வி (வயது-17) மாணவி நேற்றுக்காலை பாடசாலை செல்லும் வழியில் இடைமறிக்கப்பட்டு மயில் வாகனம் கருணாகரன் (22-வயது) எனும் இளைஞரால் கத்தியால் குத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சாயமுற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில் மரணமானார். மாணவியை தாக்கிய இளைஞர் பழைய வாடி, புளியங்குளத்தைச் சேர்ந்தவர் எனக்கூறப்படுகிறது.

இவர் இச் சம்பவத்தின்பின் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குமண வருகிறது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகருடன் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு புதிய பிரெஞ்சு சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரும் வரவுள்ளார். (159-இ)

## மகளிர் கல்லூரியில் 5 சைக்கிள் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கடந்த மாதம் 25-ம் திகதி நண்பகல் நடைபெற்ற பாடசாலை மெய்வல்லுநர்போட்டியன்று அங்கு பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஐந்து மகளிர் சைக்கிள்கள் ஒரே நேரத்தில் திருடப்பட்டுள்ளன.

சுமார் 32 ஆயிரம் ரூபா மதிப்புள்ள இச் சைக்கிள்களின் களவு சம்பந்தமாக சைக்கிள் உரிமையாளர்களான மாணவிகள் பருத்தித்துறை காவல் துறைபணிமனையில் புகாரிட்டுள்ளனர். (160)

## கொழும்புசெல்லும் நோயாளரின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்ல வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நோயாளிகள் சிபாரிசு கடிதங்களுடன் எதிர்வரும் 8-ம் திகதி சமூகமளிக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். 56 இ

## இளாலி தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று தெரிவித்தது.

## தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இன்று குமண கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ள 220 தபால் பொதிகளும் எதிர்வரும் திங்கட்கிழமை 8ம் திகதி முதல் விநியோகம் செய்யப்படவுள்ளன. (159-இ)

## பெண்களை பாதுகாக்க புதிய சாசனம்

(கொழும்பு)

பெண்களுக்கெதிராக காட்டப்படும் பாரபட்சங்களை நீக்கும் வகையில் மகளிர் சாசனம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

இலங்கை மகளிர் சாசனத்தை ஐ. நா. பிரகடனப்படுத்தியுள்ளதினால் இந்த சாசனத்தை இலங்கை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது. இதனால் 50 வீதமான பெண்கள் நன்மை அடைய இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## அப்பியாச கொப்பிகள் எடுத்துவர அனுமதி

(திருநெல்வேலி)

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளைகப்பலில் எடுத்துவருவதற்கான அனுமதியை கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திடமிருந்து யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இவ்அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து இந்த அப்பியாசக் கொப்பிகளை கொள்வனவு செய்வதற்கு வேண்டிய முற்பணத்தை யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுக்கொண்டதற்கிணங்க வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இக்கொப்பிகள் அடுத்து வரும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படும் என யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (157-இ)

## கிரிக்கெட் இந்தியா வெற்றி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும்- இங்கிலாந்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற 5-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா மூன்று விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. மனோச் பிரபாகர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா 48 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களை எடுத்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சித்து சிறப்பாகத்துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 134 ஓட்டங்களை எடுத்தார். கப்டன் அசாறுதீன் 75 ஓட்டங்களையும், அணில் கும்பிளே ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களை எடுத்தனர். (வி)

## சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தையில் கடந்த திங்களன்று பட்டப்பகலில் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதையொட்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இவர்கள் தலைமறைவாக இருந்தபோதும் துப்பு கிடைத்ததையடுத்து 3 சந்தேக நபர்களும் கைதானார்கள். (லே)

## டிப்ளோமா பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(திருநெல்வேலி)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியில் பங்கு பற்றும் ஆசிரிய மாணவர்கள் தமது பகுதி 1 பரீட்சைக்கான விண்ணப்பங்களை தவறாது தத்தம் நிலையங்களில் பெற்று எதிர்வரும் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி செய்து ஒப்படைக்கும்படி யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (159-157)

## மன்னாரில் 5 படையினர் பலி

(கொழும்பு)

மன்னார் நானாட்டான் என்னுமிடத்தில் அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 5 படையினர் உயிரிழந்ததாக கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார். (க)

## சுங்கப் பகுதியினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் பெருமளவில் களவு போனதைத் தொடர்ந்தே இந்த புதிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் கொழும்புத்துறை முகத்தில் வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றும் கப்பல்களுக்கு சுங்கப் பகுதியினர் சென்று ஏற்றப்படும் உணவுப்பொருள்களின் விபரங்களை பரிசீலனை செய்வர்.

இதேநேரம் பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல் தரித்து நின்று பொருள்களை இறக்கு முன் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட பொருள்களின் விபரங்கள் சரியாக இருக்கின்றதா என்பதை யாழ். செயலக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்ட கப்பல் தலைவரிடம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது (வி-இ)

## யாழ். மாவட்டத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் ஆணையாளர் நாயகம் சமித்தரதவத்தை இன்றை தெரிவித்துள்ளார்.

நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சேவைக்கென 4 கப்பல்கள் தற்போது பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் கடந்த டிசம்பரில் 2635 மெ தொன் உணவுப் பொருள்களும் ஜனவரி மாதம் 5250 மெ. தொன் பொருட்களும் கடந்த மாதம் 11, 430 மெ தொன் உணவுப் பொருட்களும் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றார்.

மேலும் யாழ். மாவட்ட மக்களின் உணவுத்தேவையை பூர்த்திசெய்ய மாதாந்தம் 11 ஆயிரம் மெ. தொன் உணவுப் பொருட்கள் தேவை என்றும் இதில் அதிகளுக்கான 2, 933 மெ. தொன் உணவுப் பொருள்களும் அடங்குகின்றன என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மேலதிக உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## தமிழ்நாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்விடயம் சம்பந்தமான ஆலோசனைகள் தமிழ்நாடு அரசிடம் இருந்தால நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் ஆலோசனைகளை அனுப்பலாம் என்றும் தெரிவித்தார். (க-இ)

## இளாலி தடையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இளாலி கடல் பகுதி தடையை நிவர்த்தி செய்வதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஒரு இணக்கத்துக்கு வரவேண்டும்.

இது நடவாத பட்சத்தில் வடபகுதிக்கான உணவு முழுவதையும் கப்பல் மூலமாகவே அனுப்பி வைப்பது சிரமமானது. இளாலி தடை நீக்கப்படும் பட்சத்தில் வடபகுதிக்கான உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மட்டு. விமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவ் அகதிகள் தற்பொழுது சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகக் கூறப்படுகிறது. (க)

## தடையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏரிப்பகுதி சம்பந்தமாக யாழ் குடா நாட்டு மக்கள் பெரும் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குவதால் இந்தத் தடையை உடன் நீக்கி தமிழ் மக்களின் கஷ்டங்களை போக்குமாறு மேற்படி கட்சி கோரியுள்ளது.

இதேவேளையில் யாழ் குடா நாட்டில் அரசி, மா, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் பத்து மடங்காக அதிகரித்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (வி)

## தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பை தவிர்த்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு தலைவர் திரு. மங்களமுனசிங்க அரசியல் அறிஞர்கள் மற்றும் சட்டத்துறை நிபுணர்களுடன் தற்போது ஆலோசனை நடத்தி வருகிறார். (ரி-இ)

## கஞ்சா நட்டவர்கள் பிடிபட்டனர்

(எழுதுமட்டுவாள்)

நுணாவில்கொல்லகிராயவ என்னும் இடத்தில் மிளகாய் பயிருடன் கஞ்சாநட்ட இருவர் சாவகச்சேரி தமிழீழக் காவல்துறையிடம் பிடிபட்டனர். (170-இ)

## விமானத்தாக்கு

(கொழும்பு)

மன்னாரின் வட பகுதியில் விமானதாக்குதல் இடம் பெற்றதாக கூட்டுப்படை பிரதம பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன நேற்று தெரிவித்துள்ளார்.

தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த எதுவித தகவலையும் அவர் வெளியிடவில்லை.

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான மொத்தப் புள்ளி விபரம் பாடசாலை அதிபர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் புள்ளியியர அறிக்கை நேற்று அஞ்சலில் சேர்க்கப்பட்டன என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (159-157-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தார், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B